Deposition of witness

(Chapter XXIII Code of Civil Procedure)

In the Court of Subordinate Judge, Ambur, Tirupattur District

| | |
|---|---|
| Case No. | MCOP 164/2023 |
| Name | கோவிந்தராஜ் |
| Father's /Husband | மணிவேல் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.07.2025

மனுதாரர் தரப்பு சாட்சி எண்.1 குறுக்கு விசாரணைக்காக ஆஜர்.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் எங்கு வேலை செய்கிறேன் என்றால் பந்தேரேப்பள்ளி மெட்ரோ சோல் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். எத்தனை வருடமாக வேலை செய்து வருகிறேன் என்றால் 3 வருடமாக வேலை செய்து வருகிறேன். நான் 10 ம் வகுப்பு முடித்துள்ளேன். கம்பெனியில் ஆப்ரேட்டாக பணிபுரிகிறேன். மாத சம்பளம் என்றால் சரிதான். எவ்வளவு சம்பளம் என்றால 35 ஆயிரம் ஆகும். நான் சம்பள பட்டியல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை கையில் தான் தருவார்கள். மாதம் 35 ஆயிரம் சம்பாதித்து வருவதற்கு ஆவணம் எதாவது இருக்கிறதா என்றால் இல்லை. விபத்து எப்படி ஏற்பட்டது என்றால் கம்பெனி முடித்துவிட்டு பெட்ரோல் போடுவதற்காக சென்று கொண்டிருந்தபோது இடதுபுறம் கன்ராம்பள்ளி கூட்ரோடுவில் இருந்து பாரர் பஸ் ஸ்டாண்டில் சென்று கொண்டிருந்த போது இடதுபுறமாக வந்தவர் என் மீது மோதிவிட்டார். இடதுபுறம் சென்று கொண்டிருந்தவர் கன்ராம்பள்ளி ரோட்டை பார்க்க முடியுமா என்றால் பார்க்க முடியும் ஆனால் செடிகள் இருந்ததால் பார்க்க முடியவில்லை. செடிகள் ரோட்டின் மீது இருந்ததா அல்லது பள்ளத்தில் இருந்ததா என்றால் பள்ளத்தில் இருந்தது. பள்ளத்தில் இருக்கின்ற செடிகள் கன்ராம்பள்ளி ரோட்டில் இருந்து வரும் வாகனங்களை பார்க்க முடியாததாக இல்லை என்றால் சரியல்ல. அந்த ரோட்டில் சென்று வரும் பழக்கம் உள்ளது. நான் கன்ராம்பள்ளி

ரோட்டில் இடதுபுறமாக வாகனங்கள் வரும் என்ற எதிர்ப்பார்புடன் வாகனத்தை ஓட்டி இருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்று சொன்னால் சரியல்ல செடிகள் மறைத்து கொண்டதால் வேகமாக வந்த வாகனத்தை பார்க்க முடியவில்லை வண்டி வேகமாக வந்துவிட்டது. மனுவிலும் முதல் விசாரணையிலும் கன்ராம்பள்ளி ரோட்டில் வந்த வாகனம் என் மீது மோதிவிட்டது என்று சொல்லவில்லை என்று சொன்னால் அவராகத்தான் வந்து இடித்துவிட்டார். மனுவில் நான் இடதுபுறமாக சென்று கொண்டிருந்தபோது கன்ராம்பள்ளியில் இருந்து வந்த வாகனம் முந்தி சென்றதால் இந்த விபத்து நடைபெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் கன்ராம்பள்ளி ரோட்டில் இருந்து நேராக வந்து என் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார். மேற்படி இந்த விபரத்தை நான் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். மனுவில் சொன்னவாறு விபத்து ஏற்படவில்லை என்பதால் இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. நான் யார் யார் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இன்சூரன்ஸ் கம்பெனி மேல் தாக்கல் செய்துள்ளேன். எந்த வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் இருசக்கர வாகனமான TN 83 L 0083 வாகனத்தின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் நான்தான். என் வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தின் மீது தாக்கல் செய்துள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல. என் வாகன காப்பீட்டிற்கு நான் 3ம் நபர் இல்லை என்றால் நான் இழப்பீடு கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மனுவிலும் முதல் விசாரணையிலும் என் வாகன காப்பீடு நிறுவனத்தின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொல்லவில்லை என்றால் என்னுடைய காப்பீடு நிறுவனத்தின் மீதா அல்லது விபத்து ஏற்படுத்திய காப்பீடு நிறுவனத்தின் மீது வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்று என் வழக்கறிஞரிடமோ அல்லது தந்தையிடமோ கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. வெங்கடேசன், சுகேல் அகமத் யார் என்றால் எதிர்மனுதாரர்கள். அவர்கள் மீது எதற்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அவர்கள் மீது வண்டி உரிமம் இருந்தது அதனால் தாக்கல் செய்துள்ளேன். அந்த வண்டியை ஓட்டி சென்றது யார் என்றால் பெயர் எனக்கு சரியாக தெரியாது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டியவரின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கு காப்பீடு உள்ளதா என்று எனக்கு தெரியாது. நான் மனுவில் TN 23 AM 8854 hero splender வாகனத்தின் இன்சுரன்ஸ் நெம்பர் 3372/00570585/000/00 யார் சொல்லி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இது சம்மந்தமாக எனக்கு தெரியாது காலில் அடிப்பட்டு நான் வீட்டில் இருந்தேன் என் அப்பாதான் வழக்கறிஞரிடம் சொன்னார். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பாலிசியை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது, எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். முதல் விசாரணையிலும் மனுவிலும் குறிப்பிட்டுள்ள பாலிசி எண் 3ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தால் கொடுக்கப்பட்ட பாலிசி அல்ல என்றாலும் அவ்வாறு ஒரு எண் இல்லை என்றாலும் சரியல்ல. விபத்து ஏற்படுத்தியாக கூறப்படும் வாகனத்தின் பாலிசி எண் நான் மனுவில் குறிப்பிட்ட பாலிசி எண் இல்லை என்றாலும் அதனால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வாகனம் 3ம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் காப்பீடு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் முகம், தோல்பட்டை, வலது காலில் ஓட்டை ஏற்பட்டு எலும்பு நொறுங்கிவிட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனையில் ஊனச் சான்று வழங்கப்பட்டதா என்றால் கொடுக்கவில்லை

ஆனால் என்னால் வேலை செய்ய முடியவில்லை. நான் தற்போதும் பந்தேரேப்பள்ளி கம்பெனியில் சென்று வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல வீட்டில் தான் இருக்கிறேன். நான் முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்த போது தனித்தனியாக தான் பில் தாக்கல் செய்தேன் என்றாலும் பின்பு ஒருங்கிணைந்த பட்டியலாக அ.சா.ஆ.37 ஆவனமாக தாக்கல் செய்துள்ளேன் ஆதலால் அ.சா.ஆ.16 ஆவணத்தையும் தனித்தனியாக கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல அதற்கு அடுத்தும் நான் பல்குறித்து சிகிச்சை பெற்றேன். இந்த வழக்கில் விபத்து ஏற்படுத்திய 2ம் எதிர்மனுதாரரின் வாகனம் 3ம் எதிர்மனுதாரரிடம் எந்த ஒரு காப்பீடும் செய்யாததால் 3ம் எதிர்மனுதாரர் எந்த ஒரு இடத்திலும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனு 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த இவ்வழக்கரங்கில் 24.07.2025 அன்று என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

S THANGARAJ Digitally signed by S THANGARAJ

சார்பு நீதிபதி
ஆம்பூர்.